1974 சனவரி 21]

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தச் சட்ட ஆலோசனைக் குழு வானது தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்கு கிறதா. அல்லது தொழிற்சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கு கிறதா? அதுபற்றி விதிகள் ஏதாவது வகுக்கப்பட்டிருக் கின்றனவா? ஆலோசனைகள் வழங்குவது, வாய்மொழி ஆலோ சனைகள் மட்டும்தானா அல்லது ஸ்டேட்மெண்ட் போன்றவைகள் தயாரித்துக்கொடுக்கிற முறைகளிலும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தக் குழுக்களைப் பொறுத்து, இது தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும். தொழிலாளர்கள் சங்கம் தனித்தனி சட்ட ஆலோசகர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அதிகம் தேவை இருக்காது. தனிப்பட்ட தொழிலாளர்கள் விரும்புவார் களேயானால் அவர்களுக்கு இந்தக் குழுக்கள் உதவி செய்யத் தயாராயிருக்கின்றன. தொழிற்சங்கங்களும் விரும்பினால் அவர்களுக்கும் உதவி செய்ய இந்தக் குழுக்கள் தயாராயிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதிமுறைகள் இதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன.

Minimum wages for employment in Plantations.

* 60 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to revise the rates of minimum wages for workers of Rubber, Tea and Coffee Plantations in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தோட்டத் தொழிலில் (காபி, டீ, ரப்பர்) ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் நிர்ணயம் பற்றி அரசுக்கு ஆலோசனை கூற குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் 5 (1) (a) பிரிவின்படி ஒரு பரிந்துரை குழுவை அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். டென்னிஸ் : அந்தக் குழு எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும்? இது எப்போது நடைமுறையில் வரும் என்று எதிர்ப்பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : காபி, டீ, ரப்பர் போன்ற தோட்டத் தொழில்களுக்கெல்லாம் ஏற்கனவே பரிந்துரைக்கப் பட்ட குழுவின் காலம் நெடுங்காலமாகிவிட்டது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே விரைவில் இந்தக் குழு தோட்ட அதிபர்கள், தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோர்களை வைத்து விரைவில் முடிவு எடுக்கும் ஏற்பாட்டினை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன .

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

குமாரபாளையத்தைச் சேர்ந்த திருமதி பாத்திமா பேகம் கற்பழிக்கப்பட்டு இறந்ததாக கூறப்படுவது குறித்தும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து

'the reported rape and consequent death of a lady, Mrs. Fathima Begum at Kumarapalayam in Salem District and the consequent unrest and mob fury prevailing in and around Kumarapalayam'

என்ற பொருள்பற்றி விவாதிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. வா. மை. அப்துல் ஜப்பார், திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. எ. வகாப், திரு. எஸ். முகமது கோதர் முகைதீன், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. க. உரோ. எட்மண்ட் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து நான்கு பேர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர், திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேசுவார்கள்.